<u>முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொள்ளாச்சி</u>

நாள்: 17.09.2025 EA.No.39/2018 in EP.11/2017 in OS.244/2011

எ.மசா.1. சுப்புலட்சுமி, க/பெ. கோபால்சாமி

**<u>சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு மனுதாரர் தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

1) வழக்குச்சொத்து அதை சுற்றியுள்ள சொத்துக்கள் கிணத்துக்கடவு தாலுகா, தாமரைக்குளம் கிராமத்தில் உள்ளது என்றால் சரிதான். வழக்குச்சொத்து அதை சுற்றியுள்ள சொத்துக்களும் எங்களையும் சேர்த்து ஒரு 5 குடும்பங்கள் சார்ந்த சொத்து என்றால் சரியல்ல. 1984 ம் ஆண்டு சின்னம்மாள் என்பவரிடம் இருந்து நான் கிரயம் பெற்ற வகையில் சொத்துக்கள் பாத்தியம் என்றால் அதன்படியும் பாத்தியம். என் அம்மா எனக்கு எழுதிக்கொடுத்ததின் படியும் பாத்தியம் ஆகும். எனது அம்மா எழுதிக்கொடுத்ததாக சொல்லும் ஆவணத்தை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் தாக்கல் செய்துள்ளேன். எந்த அடிப்படையில் எனக்கு பாத்தியப்பட்டது என்றால் எனது அம்மா சின்னம்மாள் எனக்கு சுத்த கிரயம் செய்து கொடுத்துள்ளார்.

2) நான் 1984 ல் கிரயம் பெற்ற உடனே 10 நபர்கள் மீது நான் அனைவரும் இடையூறு செய்வதால் விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். அந்த வழக்கில் ஏ மற்றும் பி அயிட்டம் என்று 2 சொத்துக்கள் காண்பித்துள்ளேன் என்றால் சரிதான். அந்த வழக்கில் 8 ம் பிரதிவாதி துளசியம்மாள் சுவாதீனத்தில் பி அயிட்ட சொத்து என்னுடைய அனுமதியின் பேரில் இருப்பதாக கூறியுள்ளார்கள் என்றால் சரிதான். அந்த வழக்கு முழு விசாரணைக்கு பின்பு தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் எனக்கு சொத்து இல்லை என்று தள்ளுபடி செய்யப்படவில்லை. நான் மேல்முறையீடு செய்தேன் என்றால் சரிதான்.

ஒப்பம்/-(R. சுஜாதா)

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,

பொள்ளாச்சி

3) அந்த மேல்முறையீடும் 1988 ம் ஆண்டு தள்ளுபடி செய்யப்பட்டதுஎன்றால் சரிதான். அந்த தேதியிலிருந்து இந்த மனுவில் குறிப்பிட்டுள்ள 10 பேர்களும் ராமராஜ் உட்பட சுவாதீனத்தில் இருந்தார்கள் என்றால் சரிதான். இந்த தாவாவில் 2 அயிட்ட சொத்துக்களை நான் காண்பித்துள்ளேன் என்றால் சரிதான். இந்த வழக்கிலும் ஏற்கனவே இருந்த அசல்வழக்கில் துளசியம்மாள் சுவாதீனத்தில் இருந்த சொத்தைத்தான் பி அயிட்ட சொத்தாக காண்பித்துள்ளேன் என்றால் சரிதான். எனது பிராதில் பி அயிட்ட சொத்தில் ராமராஜ் இருப்பதாக கூறி சுவாதீனம் கேட்டுதான் இந்த தாவா தாக்கல் செய்தேன் என்றால் சரிதான்.

4) என்னுடைய வழக்குப் பிராதில் ராமராஜ் பி அயிட்ட சொத்தில் என்னுடைய அனுமதியின் பேரில் குடியிருந்து வருவதாகத்தான் கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. அவ்வாறு நான் சொல்வது பொய் என்றும் என்னுடைய வழக்குப் பிராதில் ராமராஜ் பி அயிட்ட சொத்தில் என்னுடைய அனுமதியின் பேரில் குடியிருந்து வருவதாகவும் அந்த சொத்தில் உள்ள மரங்களை மார்ச் 2011 ம் தேதியில் வெட்டியதால் சுவாதீனம் கேட்டு வழக்கு தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். ஜூன் மாதம் 2011 ம் ஆண்டு ஒரு தலை பட்சமாக தீர்ப்பானது என்றால் சரிதான். மேற்படி தீர்ப்பின் அடிப்படையில் நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை ஏதேனும் எடுத்தேனா என்றால் எடுத்தேன்.

5) 2011 ம் ஆண்டு உத்தரவு பெறப்பட்ட நிலையில் 2017 ம் ஆண்டு தான் நிறைவேற்று மனு தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். இந்த வழக்கில் துளசியம்மாள் மற்றும் அந்த வழக்கில் இருந்த பிரதிவாதிகளை தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரிதான். நிறைவேற்று மனுவும் ராமராஜ் ஆஜராகததால்

ஒப்பம்/–(R. சுஜாதா)

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,

பொள்ளாச்சி

ஒருதலைபட்சமாக தீர்ப்பானது என்றால் சரிதான். நீதிமன்ற பணியாளர்களுடன் நாங்கள் சென்று சுவாதீனம் எடுத்தோம் என்றால் சரிதான். ராமராஜிடம் இருந்து சுவாதீனம் எடுக்காமல் வேறு நபர்களின் சொத்தின் சுவாதீனத்தை தவறுதலாக எடுத்துவிட்டோம் என்றால் சரிதான். யாரிடமிருந்து நாங்கள் தவறுதலாக சுவாதீனம் எடுத்தோமோ அவர்கள் நீதிமன்றத்தில் மனுதாக்கல் செய்து அதன்பேரில் மறு சுவாதீனத்திற்கு உத்தரவிடப்பட்டது என்றால் சரிதான்., அதன்பேரில் நீதிமன்ற பணியாளருடன் சென்று மற்றவர்களின் சுவாதீனம் எடுத்த போது தான் ராமராஜ்க்கு அவர் பெயரில் தீர்ப்பு பெற்ற விவரம் தெரிய வந்தது என்றால் சரிதான்.

6) அதன் பின்னிட்டு தான் ராமராஜ் இந்த EA.39/2018 மனுவை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். அந்த மனுவில் ராமராஜ் அவர் பெயரில் உள்ள கந்தாய ரசீதுகள், மின் இணைப்பு ரசீதுகள்., வீட்டு வரி ரசீதுகள் தாக்கல் செய்து அவருடைய உரிமையையும் சுவாதீனத்தையும் காட்டியுள்ளார் என்றால் சரியல்ல. வழக்கிற்கு பின்னிட்டு அவை ராமராஜால் செலுத்தப்பட்ட ரசீதுகள் ஆகும். இந்த மனுவில் நான் 1984 ம்ஆண்டு பத்திரம், அதற்கு முன் பத்திரம் சின்னம்மாள் பெயரில் இருப்பது ஆகியவற்றை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். தாவா சொத்துகளுக்கு என் பெயரில் ரசீதுகள் வருவாய்துறை ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் நான் காலியிடத்தை தான் கொடுத்தேன் அவர்கள் பலாத்காரமாக வீடுகட்டி கொண்டார்கள்.

7) நான் தாக்கல் செய்துள்ள சொத்து விவரத்தில் குறிப்பிட்டுள்ள சக்குபந்தியில் மனுதாரர் தான் வீடுகட்டி குடியிருந்து வருகிறார் என்றால் என்னை வெளியேற்றி விட்டு அவர் வீடு கட்டிகொண்டார். தாவா அசல் வழக்கின் ஏ

ஒப்பம்/-(R. சுஜாதா)

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி.

பொள்ளாச்சி.

அட்டவணை சொத்தை பொறுத்து நீதிமன்றம் எந்தவித தீர்ப்பும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. பி அயிட்ட சொத்து தனியாக கதவு எண் 2/19 செய்யப்பட்டு வரி முதலியானவைகள் செலுத்தப்பட்டு வருகிறது என்றால் அவர்கள் செய்து கொண்டார்கள். ஏ அட்டவணை சொத்தின் ஒரு பகுதிதான் பி அயிட்ட சொத்து என்றால் சரிதான். 1984 ம் ஆண்டிலிருந்து நான் தாவா சொத்துக்களை பொறுத்து பிரதிவாதிகள் பேரில் மாற்றி மாற்றி வழக்கு தாக்க்ல் செய்வதே வேலையாக கொண்டுள்ளேன் என்றால் சரியல்ல.

8) எனது பிரமாண வாக்குமூலத்தில் 5 வது பத்தியில் 1928 ம் ஆண்டில் எனது கணவருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்கள் என்று கூறியுள்ளேன் என்றால் எனது கணவருக்கு எந்தவித சொத்துக்களும் கிடையாது. நான் தாக்கல் செய்துள்ள வரி ரசீதுகள் யார் பெயரில் உள்ளது என்றால் எனது அம்மா பெயரிலும், அப்பா பெயரிலும் உள்ளது. ஒரு தலை பட்சமான தீர்ப்பின் பேரில் சுவாதீனம் எடுக்க சென்ற போது இந்த மனுதாரருக்கு ஒரு தலைபட்ச தீர்ப்பு தெரிய வந்தது என்றும் அதனால் தான் அசல் வழக்கை ஒரு தலைபட்ச உத்தரவை ரத்து செய்யாமல் இந்த மனுவை தாக்கல் செய்து அவரது உரிமையை நிலைநாட்டுகிறார் என்றால் சரியல்ல., அதனால் மனு அனுமதிக்கத்தக்கது என்றால் சரியல்ல.

ஒப்பம்/−(R. சுஜாதா)

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,

பொள்ளாச்சி